புதுமலர்: 13 இதழ்: 02 பங்குனி - சித்திரை

# அனல்

01.03.2016

## மல்கியாவில் தேவனுடைய மக்களின் பின்மாற்றம்




அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்: கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

- ரோமர் 12:11 -

பக்கம் :36 ஆண்டு: 2016 ஆசிரியர்: வே.மகாராஜா

## பொருளடக்கம்


☑ அனலின் குரல்

☑ 10ஆவது ஆண்டு நினைவுப்பகிர்வு போதகர் இன்பரூபன்

☑ கதையும் கற்றதும் - இல்லாதது வேண்டாம்...

☑ வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 05

☑ திடன் கொள்ளுங்கள்

☑ பெண்கள் பக்கம் - ஸ்திரீயானவள் சர்ப்பம் வஞ்சித்தது என்றாள்!

☑ நற்செய்திப்பகுதி - ஒளி இருளில் பிரகாசிக்கிறது...

☑ பக்தர்களின் பயிலகம் - 13

☑ குறுக்கெழுத்துப் போட்டி - 72

☑ ஏன் துன்பம்?

☑ அருட்பணியாளர் சரிதை - சார்லஸ் பீட்

☑ வினா விடை - 74

☑ அனலின் ஆன்மீக விருந்து - மல்கியாவில் தேவனுடைய மக்களின் பின்மாற்றம்


**ஜெப வேண்டுதல்**



வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.




எழுத வேண்டிய முகவரி:



**சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.**

**Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:




**ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.**

**The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


**திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -**

0044 79 4357 3341 - [Niththan] Ramesh.
external mobile charger. out of city Taxy


# அனலின் குரல்

மகிமையின் கர்த்தர் எப்போதும் மகிமைப்படுவாராக. இவ் ஆண்டில் இரண்டாவது சஞ்சிகையூடாக வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இன்றும் அனல் வெளிவர கிருபை செய்து வருகின்ற ஆண்டவர் இயேசுவுக்கே எல்லா மகிமையையும் கொடுக்கின்றோம்.

**"ஒப்பற்ற எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மேன்மை பாரெங்கும் பரவட்டும்: அவர் தம் ஏக்கம் அனுதினமும் நிறைவேறட்டும், வீழ்ந்து போன மனுக்குலம் மறுபடி எழ வேண்டும்"** என்பதே இயேசுவின் ஏக்கம். எப்படி வீழ்ந்தார்கள்? தேவ கட்டளையை மீறி செயற்பட்டதனால் பாவம் செய்து வீழ்ந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து, மனிதன் பாவத்தில் இருந்து மன்னிப்பைப் பெற்று எழுந்து வாழத்தக்க கிரயத்தைக் கொடுத்துவிட்டாரே.

நீ பாவத்தில் இருந்து வெளியேவர வழி தெரியாது தவிக்கின்றாயா? ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து, பாவங்களை அவரிடம் அறிக்கை செய்து விட்டுவிடு. உன்னை புது சிருஷ்டியாக அவர் மாற்றுவார். புது வாழ்வை நீ பெற்றுக் கொள்வாய். உன் இருதயம் சந்தோசத்தினால் நிறையும்! சமாதானம் உன்னை ஆட்கொண்டிருக்கும்.

- ஆசிரியர் -



# 10 ஆவது ஆண்டு நினைவுப் பகிர்வு..

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். - 2 தீமோத்தேயு 4:7



கர்த்தருக்குள் நித்திரையடைந்த

## வண. மாட்டின் மாரியஸ் இன்பரூபன்

[ஆசிரியர் – அனல் சஞ்சிகை, சீயோன் தேவாலய சிரேஷ்ட உதவிப்போதகர், மூப்பர், கௌரவ பொருளாளர், அதிபர் – சீயோன் வேதாகம பாடசாலை, ஆளுநர் குழு அங்கத்தவர் – இலங்கை சுயாதீன திருச்சபைகள் ஐக்கியம், அங்கத்தவர் – ஆளுனர் குழு இலங்கை வேதாகமக் கல்லூரி – பேராதனை, இணைப்பாளர் – கொழும்பு இறையியல் கல்லூரி –யாழ்ப்பாணம், முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகஸ்தர் – யாழ்ப்பாணம்.]

தேவனுடைய தோட்டத்தில் அயராது வேலை செய்த ஊழியன் - போதகர் என்றால் அதன் வரைவிலக்கணமாக கொள்ளப்படத்தக்கவர். மற்றவர்களை உயர்த்திப் பார்த்து அதிலே மகிழும் மனம் படைத்தவர். தேவனுடைய இதயத்துடிப்பை அறிந்து தம் வாழ்வை அதற்காகவே அர்ப்பணித்த அர்ப்பணிப்பாளன்.

ஏழைகளை விசாரிப்பது, வியாதிப்பட்டோரை சந்தித்து ஜெபிப்பது, தனிமையில் வாடுவோரை சந்திப்பது, ஒதுக்கப்பட்டவர்களை சேர்த்துக் கொள்வது, எந்த ஆபத்தான வேளையிலும் ஆத்துமாக்களைச் சந்திப்பது — அவர்களுக்கு உதவுவது போன்றவை போதகர் அவர்கள் அனுதினமும் செய்யும் ஊழியம் என்றே சொல்லலாம்.

ஊழியர்களை தேவனுக்காக அணிப்படுத்துவதில் மிகவும் தன்னை செலவு செய்தார். ஒரு சிறந்த வேதாகம ஆசிரியராக, வேத அறிவற்ற அனேகருக்கு ஆன்மீக அறிவொளியூட்டிய ஆசான். அநேக நேரங்களை தேவனுடைய பாதத்தில் செலவிட்டு தேவன் காண்பிக்கும் சத்தியங்களை மாணவர்களுக்கும், விசுவாசிகளுக்கும் ஊட்டிய தேவ சத்தம் கேட்கும் போதகர். தம் வாழ்வில் கடைப்பிடிக்கும் காரியங்களையே பிரசங்கிப்பவர்.

இதயம் நொந்தவர்களை தம் வார்த்தையால் தேறப்பண்ணி, உடைந்த உள்ளங்களை ஆறுதல்படுத்த தேவன் பயன்படுத்திய பாத்திரமாவார். எரிச்சல், பொறாமை, பெருமை எதுவுமற்ற மிகவும் தாழ்மையுடன் தேவனின் பணியைச் செய்த மேதை. தேவனின் நாமம் மகிமைப்பட தன்னை தாழ்த்தி அர்ப்பணித்தவர்.

ஆத்தும பாரத்துடன் கண்ணீர் சிந்தி ஜெபிப்பதும், தேசம் இரட்சிக்கப்பட வேண்டும் என கதறுவதும், தேவனை அறிந்தவர்கள் தேவனுக்குள் வேரூன்ற வேண்டும் என்ற ஏக்கத்துடன் உழைத்த உத்தமன். தேவனுடைய இராஜ்ஜிய வளர்ச்சிக்காய் ஓடி ஓடி உழைத்தார். அவராலே உருவாக்கப்பட்ட அனேக ஊழியர்களும், அவர் மூலமாய் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட அனேக தேவ பிள்ளைகளும் இருக்கிறார்கள். சீயோன் தேவாலயத்தின் சரித்திரத்தில் அவர் செய்த தேவபணி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அனல் சஞ்சிகையின் ஆசிரியராக பல ஆண்டுகள் செயற்பட்டு அனல் அனேக மக்களின் மனங்களில் இடம்பிடிக்க உழைத்தவர் **போதகர் இன்பரூபன்** அவர்கள்.

இன்று உலக ஆசீர்வாதங்கள் உயர்வுகள் தொழில் மற்றும் கௌரவங்கள் போன்றவற்றைத் தேடி தேவனையும் அவருடைய அழைப்பையும் அனேகர் உதாசீனம் செய்கிறார்கள். ஆனால் போதகர் இன்பரூபன் அவர்கள் தேவனுடைய நாமத்திற்காக இவைகளை எல்லாம் புறம்பே தள்ளியவர்.

**"கானல் நீருக்காக ஒரு போதும் போதகர் இன்பரூபன் குடம் சுமந்ததே இல்லை?"**

அவர் செய்த ஊழியம் சகல மக்களிடமும் பெறுமதியானதே. அவர் செய்த ஊழியம் தேவனுக்குப் பெறுமதியானது. பெறுமதியான ஆத்துமாக்களைத் தேவனுக்காக ஆதாயம் செய்திருக்கிறார்.

கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காகப் பல பொறுப்புக்களை வகித்தவர். அவைகள் அனைத்திலும் செயற்திறனுடன் செயற்பட்டு எண்ணிக்கையற்ற மக்களின் மனங்களில் இடம் பிடித்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்திய **போதகர் இன்பரூபன்** அவர்களின் வாழ்வுக்கான சகல மகிமையும் தேவனுக்கே சேரும்.

**போதகர் இன்பரூபன்** குறித்து நாம் சொல்லியிருப்பது கையளவு: சொல்லப்படாதவைகள் கடலளவு உண்டு!. தேவனுக்கே மகிமையுண்டாகட்டும்!!!.

**- ஆசிரியர் -**



# இல்லாதது வேண்டாம்!



○ வை. விமலதாஸ்

குமார் கம்பனி ஒன்றில் எழுதுவினைஞராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கம்பனியின் முதலாளி மிகவும் உயர்ந்த வசதிகள் கொண்டவராகவும், அதிகமான தொழிற்சாலைகளுக்கு உரிமையாளருமாக இருந்தார். குமார் ஒவ்வொரு நாளும் வேலைக்குச் செல்லும் போது அங்கே தன்னுடைய முதலாளியைப் பார்த்துப் பொறாமைப்படுவான். தன்னுடைய மனதில் நினைத்துக் கொள்வான்: தன்னுடைய முதலாளி எவ்வளவு பெரிய பணக்காரராக இருக்கின்றார், அவருக்கு சொந்தமாக எவ்வளவு கம்பனிகள் இருக்கின்றது. முதலாளியின் தகப்பன் இந்தக் கம்பனியை அவருக்காக விட்டுச் சென்றிருக்கின்றார். அவரும் தன்னுடைய தகப்பனுடைய கம்பனியை இப்போது நடத்திக் கொண்டிருக்கின்றார். ஆனால் நான் ஒரு சாதாரணமானவனாக இருக்கின்றேன். என்னுடைய அப்பா எனக்காக எந்த சொத்தையும் சேர்த்து வைக்கவில்லை, அவர் எனக்காக எதுவுமே செய்யவில்லை. அதனால் இந்த கம்பனியில் சாதாரண எழுதுவினைஞராக வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றேன். காலையில் வேலைக்குச் செல்லும் போது அங்கே இருக்கின்ற எல்லோரும் அந்த முதலாளி வரும் போது அவருக்கு முன்பதாக எழுந்து நின்று வணக்கம் சொல்வதையும், மரியாதை கொடுப்பதையும் பார்ப்பான். முதலாளி எப்படி ஸ்ரைலாக உடுத்திக் கொண்டு வருகின்றார், தற்போதைய மாடல் உடைகளையே அணிகின்றார்: என்னைப் பார் என்னால் ஒரு சாதாரண உடையைக் கூட வாங்க முடியவில்லை. முதலாளி செல்கின்ற காரைப் பார்த்து, எவ்வளவு விலை உயர்ந்த காரில் சென்று வருகின்றார், என்னால் ஒரு சாதாராண காரைக் கூட வாங்க முடியவில்லை, என்னிடம் ஒரு பழுதடைந்த மோட்டார் சைக்கிள் தான் இருக்கின்றது. இப்படி முதலாளி செய்கின்ற ஒவ்வொரு காரியங்களையும் பார்த்து இவன் பொறாமைப்பட்டுக் கொண்டேயிருப்பான்.

ஒவ்வொரு நாள் வேலை முடிந்த பிற்பாடும் வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் தன் முதலாளியைப் பற்றியே பொறாமைப்பட்டு கூறிக் கொண்டிருப்பான். முதலாளிக்கு வங்கியில் இவ்வளவு பணம் இருக்கின்றது, புதிதாக எத்தனை தொழில்களைத் தொடங்கியிருக்கின்றார், அவருக்கு எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றது என்று அவரைப் பற்றியே கூறிக்கொண்டிருப்பான். அது மாத்திரமன்றி தன்னைக் குறித்துக் குறை சொல்லிக் கொண்டேயிருப்பான். என்னைப்பார், என்னிடம் எதுவுமே இல்லை, என்னுடைய அப்பா எனக்கு எதையுமே சேர்த்து வைக்கவில்லை, எனக்காக அவர் எதையுமே செய்யவில்லை, ஏன் எனக்கு மாத்திரம் இப்படி நடக்கின்றது, என்று குறைப்பட்டுக் கொண்டேயிருப்பான். அப்போது அவன் மனைவி சொல்வாள்: நீங்கள் இப்படி பேசாதீர்கள்! ஆண்டவர் உங்களுக்கு எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார். உங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதங்களை தந்திருக்கின்றார். நீங்கள் இப்படிக் குறை சொல்லக்கூடாது என்று சொல்லுவாள்.

ஆனால் இதையெல்லாம் குமார் காதில்போட்டுக் கொள்ளவே மாட்டான். உண்மையில் பார்த்தால் என்னுடைய முதலாளிக்கும் எனக்கும் ஒரே வயது தான். அத்துடன் எனக்கும் முதலாளிக்கும் ஒரே திறமைகள் தான் இருக்கின்றது. அவர் எவ்வளவு ஆங்கிலம் பேசுவாரோ அவ்வளவு நானும பேசுவேன், அவர் என்ன படித்திருக்கின்றாரோ அதே படிப்பைத் தான் நானும் படித்திருக்கின்றேன். ஆனால் அவருக்கு நல்ல பெற்றோர் கிடைத்த படியினால் அவர்கள் அவருக்காக எல்லாவற்றையும் சேர்த்து வைத்தார்கள். அவருடைய பெற்றோர் பணக்காரராய் இருந்தபடியால் அவருக்கு எல்லாம் தானாகவே வந்துவிட்டது. ஆனால் முதலாளியைப் போன்ற திறமை, படிப்பு இருந்த போதிலும் என்னுடைய பெற்றோர் எனக்காக எதையும் சேர்த்து வைக்காதபடியினால் நான் கஷ்டப்படுகின்றேன். ஏன் கடவுள் இப்படி பாரபட்சமாய் இருக்க வேண்டும்? ஒரே திறமையுள்ள இருவரில் ஏன் ஒருவருக்கு மட்டும் ஆசீர்வாதங்களைக் கொடுக்க வேண்டும்? எனக்கு மட்டும் ஏன் எல்லாவற்றையும் குறைவாக வைத்திருக்க வேண்டும்? இப்படியெல்லாம் பார்த்தால் ஆண்டவர் பட்சபாதமுள்ளவர்தானே என்று தன் மனைவியோடு எப்போதும் தர்க்கப்பட்டுக் கொண்டிருப்பான். இப்படியே நாட்கள் ஓடிக் கொண்டிருந்தது.

ஆனால் ஒரு நாள் அந்த முதலாளி இவனை தன்னுடைய அறைக்கு அழைத்து உட்காரவைத்தார். பிற்பாடு முதலாளி குமாரைப் பார்த்து: அனேக நாட்களாக என்னுடைய மனதில் இருந்த காரியம் இது, அதை இன்று உன்னிடம் நான் கூறவேண்டும் என்றார். குமார் வியப்போடு இவர் என்ன சொல்லப் போகின்றார் என்று பார்த்துக் கொண்டிருந்த போது முதலாளி சொன்னார்: நான் ஒவ்வொரு நாளும் உன்னைப்பார்த்துப் பொறாமைப்பட்டுக் கொண்டேயிருப்பேன். குமார் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கின்றான், அவன் என்னோடு தான் படித்தான், என்னுடைய தகமைகள் அனைத்தும் அவனிற்கு இருக்கின்றது, அவன் வேலைக்கு வந்து தன் வேலைகளை முடித்து நின்மதியாக மாலை நேரத்தில் வீட்டிற்குச் சென்று மனைவியோடு சந்தோஷமாய் இருக்கின்றான். அவனுக்கு எந்தவிதமான கவலைகளும் கிடையாது, எந்தவிமான அழுத்தங்களும் கிடையாது. ஆனால் நான் இன்று

இந்த வேலை செய்ய வேண்டும், அவரைப் போய் பார்க்க வேண்டும், வங்கியில் இவ்வளவு பணம் வைப்பிலிடவேண்டும், இவ்வளவு பணத்தைச் சேர்க்க வேண்டும், யாரிடம் கேட்க முடியும், எமக்கு தரவேண்டிய பணத்தை இன்று தருவோம் என்று சொன்னார்களே அந்த பணம் இன்று வருமா, அந்த ஒப்பந்த வேலை எமக்கு கிடைக்குமா? கிடைக்காதா? வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமே, எமது கம்பனிக்கு போட்டியாக அதிக கம்பனிகள் வந்து கொண்டிருக்கிறதே அவை எமது கம்பனியை கீழே தள்ளிவிடுமா? என்னுடைய அப்பா இந்த கம்பனிக்கு இவ்வளவு பெரிய பெயரை சம்பாதித்து வைத்திருக்கின்றாரே, கம்பனியை இந்தளவுக்கு வளர்த்து வைத்திருக்கின்றாரே இதையெல்லாம் நான் சரியவிடாமல் வைத்திருக்க வேண்டுமே என்ற அழுத்தம், சம்பாதித்த பணங்களை முதலிட்டு வைத்திருக்கின்றோமே அவை எல்லாம் முறிந்து போய்விடுமா? என்ற பயம் என்று எவ்வளவு பயங்கள், அழுத்தங்கள், பொறுப்புக்கள், எப்போதும் சந்தோஷம் இல்லாத வாழ்க்கை, ஒவ்வொரு நிமிடங்களும் அவ்வளவு பாரமாக இருக்கின்றது, இதனால் தான் நான் மாலை நேரங்களில் கிளப்புக்களுக்கு சென்று அங்கே மது அருந்தினாலாவது என்னுடைய கவலைகள் குறையுமா என்று பார்க்கின்றேன். இரவில் வந்து படுத்துக் கொண்டால் நித்திரை வரவில்லை, பணம் எவ்வளவு இருந்து என்ன பயன், சொத்து இவ்வளவு இருந்து என்ன பயன், வெளியே இவ்வளவு மரியாதை இருந்தும் என்ன பயன். இரவில் நன்றாக தூங்கக்கூட முடியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் நேற்று என்னுடைய நண்பனும் நானும் தேவாலயத்திற்கு சென்ற போது அங்கே அவர்கள் செய்த பிரசங்கம் என் மனநிலையை மாற்றிவிட்டது என்று கூறினார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த குமார் மாலை வீட்டுக்குச் சென்று தன் மனைவியைப் பார்த்துச் சொன்னான், இதுவரை என்னுடைய முதலாளி தான் மிகவும் சந்தோசமாய் இருக்கின்றார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் என்னைப் பார்த்து பொறாமைப்பட்டுக் கொண்டிருந்திருக்கின்றார். இப்போது தான் நான் புரிந்து கொள்கின்றேன், ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு புதிய புதிய ஆசீர்வாதங்களைக் கொடுத்து தான் படைத்திருக்கின்றார், அதை நான் புரிந்து கொள்ளாமல் வாழ்ந்திருக்கின்றேன் என்று சொன்னான். அப்போது அவன் மனைவி அவனை கட்டியணைத்துக் கொண்டாள். அது அவனுடைய வாழ்வில் புதிய பக்கம் ஆரம்பமாகின்றது என்பதனை காண்பித்தது.

ஆம் நண்பர்களே! தேவன் ஒவ்வொருவருக்கும் சிறப்பான காரியங்களை கொடுத்துத் தான் படைத்திருக்கின்றார். உலகத்தில் ஒவ்வொருவரும் வித்தியாசம் வித்தியாசமானவர்களாய் படைக்கப்பட்டிருக்கின்றார்கள். தேவன் யாரையும் குறைத்து படைக்கவில்லை. உங்களுக்கு இருப்பது போதும் என்ற எண்ணத்துடன் வாழ்க்கையை நடத்துங்கள்! வாழ்க்கை அழகிய பூந்தோட்டமாக மாறும். **பிரசங்கி 4:4 மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்: இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.**




வாலிபர் வளாகம்

போதகர் வேதநாயகம் சுமணன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாலிப உள்ளங்களுக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

உபத்திரவத்தினால் சிதறினவர்களின் நேர்த்தியான பிரசங்கம் எழுப்புதலைக் கொண்டு வந்தது.

அப்போஸ்தலர் 8:2-5,8,12 (2.) தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். 3. சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். 4. சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். 5. அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். 8. அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. 12. தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"உன்னை ஆண்டவர் மீட்டெடுத்தார். உன் பாவங்களை தன்னுடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கழுவி தன் பிள்ளையாய் ஏற்றுக் கொண்டார்" என்னும் இரட்சிப்பின்

நிச்சயமும் மகிழ்ச்சியும் இருக்குமேயானால் நீ கிறிஸ்துவைக் குறித்தும் சுவிசேஷத்தைக் குறித்தும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும் பிரசங்கிப்பதற்கு (எடுத்துக்கூறி அறிவிப்பதற்கு) முழு அதிகாரமும் சுயாதீனமும் வேதம் உனக்குத் தருகிறது.

எருசலேமிலே சபைக்கு மிகுந்த உபத்திரவம், துன்பம் உண்டாயிற்று. இதின் நிமித்தம் சிதறிப் போனவர்கள் முதல்தரமான பணியாக, தலையாய கடமையாக தேவனின் மாபெரும் திட்டத்தை செயல்படுத்துவதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். குறிப்பாக, பிலிப்பு என்பவன் அற்புத அடையாளங்களோடு கூட வசனத்தை உறுதிப்படுத்தி பிரசங்கத்தை செய்து வந்தான்.

## யார் இந்த பிலிப்பு

**“உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கும்படி இயேசு அளித்த கடைசி கட்டளையை கருத்தில் கொள்ளாமல் இருந்த போது”** எருசலேமிலிருந்த சபைக்கு பாடுகள் நெருங்கி பாடுகளால் சபை மக்கள் எருசலேமிலிருந்து சிதறடிக்கப்பட்ட போது பிலிப்பு நற்செய்தியை சமாரியாவுக்கு கொண்டு சென்றார். **இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் முதன் முதலில் சமாரியருக்கு நற்செய்தியை அளித்தவர் பிலிப்புவே.**

- சாதாரண பந்தி விசாரிப்புக்காரர்களில் ஒருவன்.
- எருசலேம் சபையில் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றவர்.
- சமாரியரை வெறுக்காமல் அவர்கள் பட்டணத்திற்கு சென்று கிறிஸ்துவை பிரசங்கித்தார். விசுவாசித்து மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.
- ஊழியம் நன்றாக நடந்து கொண்டிருந்த போது தேவனால் கட்டளை பெற்று வனாந்தரத்திற்கு சென்றார்.
- திரள் கூட்டத்திற்கும் ஊழியம் தேவை. தனி நபருக்கும் கிறிஸ்துவின் அன்பு சிலுவை சொல்லப்பட தன்னை பழக்கிக் கொண்டவர்.
- வேத வார்த்தைகளை நன்றாக விளக்க அறிந்திருந்தார். வேத தியானம் செய்யும் ஒரு தேவ மனுஷன்.

* உயர் பதவியில் இருப்போரையும் கிறிஸ்துவிடம் வழிநடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார்.

* தான் செல்லும் இடமெங்கும் நற்செய்தி பணியையே ஆற்றி தேவ ராஜ்யத்தை வளர்த்தெடுத்த சாதாரண மனிதன்.

இந்தக் காலம் பிலிப்புக்கள் தேவனுக்காய் எழும்ப வேண்டிய நேரம். இருக்கின்ற பெலத்தோடே (திராணியோடே) கிறிஸ்துவின் ராஜ்ய மேன்மைக்காக செயற்படுவீராக.

---

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். அனைவருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. தேவ நீதி சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இயன்றமட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகின்றேன் - ரோமர் 1:14-17

---

பவுல் அப்போஸ்தலன் தன் பணியை மட்டுமல்லாது தேவனால் பிறந்த ஒவ்வொருவனும் கண்டிப்பாக செய்ய வேண்டிய தேவனின் இதய தாகத்தை எடுத்துரைக்கின்றார்.

அருமையானவர்களே! உங்கள் வாலிப ஜீவியத்தில் பெறுமதியான (பொன்னான) காலத்தில் பிலிப்புவைப் போல் சுவிசேஷத்தை தைரியமாய் எங்கும் பிரசங்கியுங்கள். அதுவே மெய்யான எழுப்புதலுக்கான நேர்மையான வழியாகும்.

**ஜெபிக்கலாமா,**

அன்பின் ஆண்டவரே என்
வாழ்வில் வரும் ஒவ்வொரு
சந்தர்ப்பத்திலும்
உம்மைப்பற்றி
மற்றவர்களுக்கு சொல்ல
கிருபையையும் பெலத்தையும்
தாரும். உம் வசனத்தை
நேசித்து அதன்படி வாழ
அருள்புரியும். ஆமென்.








ரேமா

**“உலகத்தில் உங்களிற்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்: நான் உலகத்தை ஜெயித்தேன்”** என்று ஆண்டவர் இயேசு கூறினார்.

அருமையான நண்பனே உன் வாழ்வில் கிறிஸ்து தரும் மெய்யான விடுதலையைப் பெற்று அனுபவிக்க வேண்டுமானால்: இவ் உலகம் எத்தன்மை உள்ளது என்பதை நீ அறிய வேண்டும். சத்திய வேதம் சொல்கின்றது, **கோணலும் மாறுபாடுமானது என்றும் பொல்லாங்கன் (சாத்தான்) தன் கிரியைகளை வித்தியாசம் வித்தியாசமான முறைகளிலே இயக்குவிக்கின்றான் என்பதை நீ அறிவாயோ?**

இயேசுவும் உலக மக்களின் பாவத்திற்கான தண்டனையை சிலுவையிலே சுமந்து தீர்க்கும்படியாக தன்னை அர்ப்பணித்து ஜெயம் எடுத்த ஆண்டவராயிருக்கிறார்.

வெற்றி பெற்றவர், தன்னை விசுவாசிப்பவர்களுக்கும் தன்னை பின்பற்றுபவர்களுக்கும் உலகத்திலே அதிகமான சோதனைகள், பாடுகள் உண்டு என்பதை தெளிவாக கூறுகின்றார்.

இதை வாசிக்கும் அன்பு உள்ளங்களே, உபத்திரவங்களைக் கண்டு மனம் சோர்ந்துவிடாதீர்கள். உலகத்திலே இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர். பெரியவராகிய இயேசுவுக்கு வாழ்வில் இடம் கொடுத்து அவரையே அண்டிக் கொள்ளுங்கள்.



# ஸ்திரீயானவள்: சர்ப்பம் வஞ்சித்தது என்றாள்!

திருமதி. J.பிலிப்




ஒரு கிராமத்தில் வாழ்ந்த வயது முதிர்ந்த ஓர் தம்பதிகள் சில ஆடுகளையும் அதன் குட்டிகளையும் கவனமாய் பராமரித்து வளர்த்து வந்தார்கள். ஒரு நாள் இவ் விருவரும் அப் பட்டணத்தில் உள்ள தம்முடைய உறவினருடைய ஒரு கொண்டாட்ட நிகழ்விற்காகச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அப்போது அவர்கள் இருவரும் தங்களுடைய ஆடுகளுக்குத் தேவையான புல், நீர் மற்றும் தேவையான சகலத்தையும் அவைகளுக்கு அருகில் வைத்துவிட்டு வாசலைப் பூட்டி, அன்பாக ஆடுகளைப் பார்த்து: கவனமாய் இருங்கள், நாங்கள் போய் சாயங்காலம் வருவோம் என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

ஆடுகளுக்குள்ளே ஒரு சம்பாசணை ஆரம்பமாகியது. ஒரு ஆடு மற்ற ஆடுகளைப் பார்த்து ஏன் எங்களை இப்படி சிறை வைத்திருக்கிறார்கள். வெளியே சென்றால் ஐயா முன்பதாக செல்வார். அவருக்கு பின்பாக தான் நாம் செல்ல வேண்டும். அம்மா தடியுடன் எங்களின் பின்பக்கமாக வருவார். அவர்கள் எங்களை கூட்டிப் போகிற இடத்திற்குத் தான் நாங்கள் செல்ல வேண்டும். அவர்கள் தருகிற உணவைத் தான் நாங்கள் சாப்பிட வேண்டும். ஏன் மற்றவர்கள் போன்று நாம் விரும்பும் இடங்களிற்கு செல்ல முடியாது. நாம் விரும்பும் உணவை உண்ண முடியாது எனப் பல கேள்விகள் அவர்களுக்குள் எழும்பியது.

ஒரு சிறு ஆட்டுக்குட்டி மட்டும் பொறுங்கள், நான் போய் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வருகின்றேன் என்றது. இவர்களது சம்பாசணையை மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தது ஒரு ஓநாய். மெதுவாக வந்து கொண்டிருந்த ஓநாயைக் கண்ட எல்லா

ஆடுகளும் ஓட்டம் பிடித்தன. ஆனால் ஒரு ஆட்டுக்குட்டி மட்டும் ஓநாயைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டியைக் கண்ட ஓநாய், நண்பா, ஏன் நீ தூரத்தில் நின்று ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறாய், உங்களுடைய வேதனையான சம்பாசணையை நான் கேட்டேன். வா, நானும் நீயும் நண்பர்களாய் இருக்கலாம். நான் போகும் இடம் எல்லாம் நீ என்னுடன் வரலாம். நீ சற்று இந்த வேலிக்கரைக்கு வந்தால் நான் எப்படியாவது உன்னை கூட்டிப்போவேன் என்றது. ஆட்டுக்குட்டியும் ஓநாயின் பேச்சை நம்பி, தன்னுடைய இரண்டு காதுகளையும் அழகாக விரித்து மிகவும் சந்தோஷமாய் தன்னுடைய தலையை ஓநாயை நோக்கி நீட்டியது. ஓநாய் அப்படியே ஆட்டுக்குட்டியை கீறிக்கிழித்துவிட்டது. மாலை நேரத்தில் திரும்பிய தம்பதிகள் பார்த்த போது, ஆட்டுக்குட்டியை ஓநாய் வஞ்சித்துவிட்டது என்று கண்டுகொண்டார்கள்.

**ஆதியாகமம் 3:13. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.** ஆம் அருமையான சகோதரிகளே, ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் தான் முதலாவது வஞ்சிக்கப்பட்டாள்.

**அவள் எங்கே வஞ்சிக்கப்பட்டாள்? அழகான தோட்டத்தின் நடுவே வஞ்சிக்கப்பட்டாள்.**

**ஏன் வஞ்சிக்கப்பட்டாள்? அவளுக்குள் இருந்த மேலதிகமான ஆசை. தேவர்களைப் போல இருக்க வேண்டும் என்ற பேராசை.**

**1தீமோத்தேயு 2:14 மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.** அருமையான சகோதரிகளே வேதம் பெண்களாகிய எங்களுக்கு அனல் சஞ்சிகை மூலம் ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறது: **"வஞ்சிக்கப்பட்டுப்போகாமல் இருக்கும் படியாக".** கோபக்குணம், சண்டைக் குணம், எரிச்சல் குணம் போன்ற குணாதிசயங்கள் வெளிப்படையாக எங்களில் சில வேளை காணப்படலாம். ஆனால் இந்த வஞ்சிக்கின்ற குணம் வெளியே தெரியாது. அது மறைந்திருந்து தன்னுடைய காரியத்தை நடப்பிக்கும் - சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது போன்று.

ஏதேன் தோட்டத்தில் ஏவாள் சர்ப்பம் மூலம் தான் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டாள். தேவன் ஏன் நீ இப்படிச் செய்தாய் என்ற கேள்விக்கு: சர்ப்பம் வஞ்சித்தது என்று உடனே பதில் கூறிவிட்டாள். தேவன் எதை செய்ய வேண்டாம் என்று கட்டளை கொடுத்தாரோ அதையே செய்யும்படி சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது. **வஞ்சிக்கும் குணம் அது பிசாசின் கிரியை என்பதை நாம் அறிந்திருந்தல் மிகவும் அவசியம.**

**11கொரிந்தியர் 11:3 ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ வென்று பயந்திருக்கிறேன்.** என்று அப்போஸ் தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எச்சரித்தது போன்று அனல் சஞ்சிகையும் பெண்களாகிய எங்களுக்கு ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறது.

**வஞ்சிக்கும் குணம் அது பிசாசினால் ஆரம்பிக்கப்பட்டது.** அவன் தந்திரமாய் தேவனுடைய திட்டத்தில் இருந்து தேவபிள்ளை களை வீழ்த்தும்படியாக வருவான். இது தான் ஏதேன் தோட்டத்தில் நடந்தது. **தேவன் அவர்களை எல்லாவற்றையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று ஆசீர்வதித்தார் என்று ஆதியாகமம் 1:28** கூறுகின்றது.

இதை அறிந்த சர்ப்பம் தேவ திட்டத்தில் இருந்து இந்த கணவன் - மனைவியை வீழ்த்த வேண்டும் என்ற வஞ்சக எண்ணத்துடன் தந்திரமாய் ஸ்திரீயை நோக்கி வந்தது. தன்னுடைய வஞ்சக பேச்சினால் ஸ்திரீயை தன் வலைக்குள் வீழ்த்திவிட்டான். **தேவன் தங்களை ஆசீர்வதித்ததை மறந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்ற தந்திரக்காரனுடைய வஞ்சக பேச்சைக் கேட்டு தேவன் தங்களுக்கு இட்ட கட்டளையை மீறி மீறுதலுக்குட்பட்டாள் ஸ்திரீ.**

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயா னவள் உடனே, சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்றாள். அருமையான சகோதரியே, ஆதாமுக்கே வஞ்சகனை கண்டு கொள்ள முடியவில்லை. தேவரீர் தந்த ஸ்திரீ என்று ஸ்திரீயின் மேல் குற்றம் சுமத்தினான். ஆனால் தேவன் ஏவாளைக் கேட்டவுடன் சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்றாள். தேவன் உனக்கும் இந்த ஞானத்தைத் தந்திருக்கிறார். ஏவாளைப் போல வஞ்சிக்கிற ஆவியை கண்டுபிடிக்க உன்னாலும் முடியும்.

அப்போஸ்தலர் **5:1-2 (1.) அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். 2. தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.** அனனியா – மனைவி ஆகிய இருவரும் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தனர். கணவன் - மனைவி இருவருக்கும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் அவர்கள் இருதயத்தை நிரப்பி விட்டான். அவர்கள் இருவரும் பேதுருவுக்குத் தான் பொய் சொன்னதாக நினைத்தார்கள். ஆனால் பேதுருவோ: **"நீ தேவ மனுஷனிடத்தில் அல்ல: தேவனிடத்தில் பொய் சொன்னாய்"** என்றார். ஆம்! வஞ்சிக்கும் குணம் எங்களுக்குள் வரும் போது பயமில்லாமல் பொய் சொல்ல நேரிடும் முடிவிலே அனனியா – சப்பீராள் இருவரும் மரிக்கவேண்டியதாயிற்று. காரணம்: இருவரும்

சேர்ந்து வஞ்சித்தார்கள். சப்பீராளாவது தன்னுடைய கணவனுக்குள் வஞ்சிக்கிற ஆவி புகுந்துவிடாதபடி தடுத்து இருக்கலாம். ஆனால் இருவரும் சேர்ந்து மனைவி அறிய என்று வேதம் குறிப்பிட்டுள்ளது. இவ் மனைவி தன்னையும், தன்னுடைய கணவனையும் வஞ்சிக்கிற ஆவியில் இருந்து தப்பித்திருக்கலாம். ஆனால் அதை அவளால் செய்யமுடியவில்லை. இதன் முடிவு பரிதாபமாக மாறியது.

காரணம் பணத்தின் மேல் இருந்த பேராசை. **மல்கியா 3:8 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.** ஒருவேளை நான் யாரையும் வஞ்சிக்கவில்லை என்று நீ நினைக்கலாம். **உன்னுடைய காணிக்கை, தசமபாகத்தை குறித்து நீ சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. உன்னை ஆசீர்வதிக்கும் படியாகவே தேவன் உன்னை தெரிந்து ஒரு சபையில் வைத்து உன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவையான ஆகாரத்தை உன் ஊழியர்கள் மூலம் உனக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்.**

நீயும் மேலே கதையில் கூறப்பட்ட ஆட்டுக்குட்டி போன்று ஓநாயின் வஞ்சகப் பேச்சை கேட்டு மாண்டுபோகாதபடி உன்னையும் சுற்றி வேலி அடைத்து உன் போதகர் வைத்திருக்கலாம். அது உனக்கு ஒரு வேளை கஸ்டம் போன்று தெரியலாம். ஆனாலும்: நீ பொறுமையுடன் தேவன் உன்னை வைத்திருக்கும் இடத்தில் தேவனுடைய திட்டத்திற்குள் இருப்பாயானால் தேவ ஆசீர்வாதம் உன் பக்கம் இருக்கும். **எபேசியர் 4:14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்**, தேவ திட்டத்தில் நிற்போம். அப்போது தேவ ஆசீர்வாதம் நம் பக்கமாய் இருக்கும்.



**இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்: இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**
**- செப்பனியா 3:15b -**



# ஒளி இருளில் பிரகாசிக்கின்றது...

J. கிறேசியன்




**யோவான் 1:5[a] அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது.**

இவ் வார்த்தையை நாம் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்க்கும் போது மனித வாழ்வில் மனிதனுக்கான மிக முக்கிய தேவை ஒன்றைக் குறிப்பிடுவதை நாம் அவதானிக்கின்றோம்.

இவ் வார்த்தையை பேசும் போது, இதுவொரு இருள் சூழ்ந்த காலம், மக்கள் நம்பிக்கை இழந்து தவித்த காலம். மக்களுடைய வாழ்வில் சமாதானம், சந்தோஷம், நின்மதி கிடைக்குமா என்று ஏங்கித் தவித்த காலம். இதனை நாம் ஆழ்ந்து கவனிக்கும் போது இதுவொரு காரிருள் சூழ்ந்த காலம்.

பொதுவாக நாம் இருள் நிறைந்த இடத்தை கடந்த செல்ல வேண்டுமென்றால் நாம் எம்முடன் ஒரு வெளிச்சத்தை கொண்டு செல்வோம். ஏனெனில் வெளிச்சம் இல்லாவிட்டால் நாம் தடுமாறி விடுவோம். பல ஆபத்துக்கள், பல விபரீதங்களிற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும்.

“ ”
இதே போன்று எம்முடைய ஆத்துமத்தில், எம்முடைய மாம்சீக வாழ்வில் இருள் சூழ்ந்த நிலைக்குள் அகப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

இதே போன்று எம்முடைய ஆத்துமத்தில், எம்முடைய மாம்சீக வாழ்வில் இருள் சூழ்ந்த நிலைக்குள் அகப்பட்டிருப்பதை

நாம் காணலாம். இன்றைய நிலையை நோக்கும் போது மனிதர்கள் பலரும் பாவத்தின் அகோரத்தினால் உண்டான தாக்கம், தோல்விகள், பிரச்சனைகள், இல்லாமைகள், ஏமாற்றங்கள், வறுமைகள், வியாதிகள், விரக்திகள்.... இவை அனைத்தும் மனிதனை நடைபிணமாக்கியுள்ளது. இதனைத் தான்: **லூக்கா 1:78 அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்**, கூறுகின்றார். ஜனங்கள் அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்கார்ந்து இருக்கின்றார்கள். இவ் இருள் மனிதர்களை வேதனைப்படுத்தி, கண்ணீர் வடிக்க வைக்கின்றது.

இதனை வாசிக்கின்ற அன்பு சகோதரா, சகோதரி உன்னை கலங்கபண்ணுகின்ற இருள் என்ன? அது எந்த இருளாக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவால் அதனை நீக்க முடியும்.

**மல்கியா 4:2 ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.** நீதியின் சூரியன் உதிக்கும். எத்தனை பெரிய காரிருளாக இருந்தாலும் சூரியன் உதித்தவுடன் அந்த இருள் தானாக மறைவது போன்று உங்களை எப்படிப்பட்ட இருள் மூடியிருந்தாலும் நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் உதித்தவுடன் அந்த இருள் விலகி மறைந்து விடும். அது தான் இருளில் பிரகாசிக்கின்ற ஜீவ ஒளியாகும்.

---

# குறுக்கெழுத்துப் போட்டி – 71

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

03. எகிப்து - உபாக 4:20
06. யோசியா - 11நாளா 35:22
08. யாஷோபியாம்-1நாளா 11:11
09. பாகால்பிராசீம்-11சாமு 5:20

**வலமிருந்து இடமாக**

02. அத்தாளியாளை-11இராஜா11:16
04. யோசுவா - எண்ணா 13:16
05. ஆதாத் - 1இராஜா 11:14
07. ஏலாம் - தானியேல் 8:2

**மேலிருந்து கீழாக**

01. ஒத்னியேலுக்கு - நியாயா 1:13
02. அபினதாப் - 1சாமு 17:13
03. எபெத்மெலேக் - எரேமி 38:7

**கீழிருந்து மேலாக**

05. ஆகீஸ் - 1சாமு 21:13
09. பாக்கியவான்கள் - சங்கீ 84:5
10. பிலேயாம் - எண்ணா 24:3
11. சிம்ரி - 1இராஜா 16:18




## ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

ஏனெனில் கர்த்தரின் பெரிய போராட்டங்கள் எல்லாம் கிறிஸ்தவ போர்ச் சேவகரால் முழங்காலில் நின்றே வெல்லப்பட்டிருக்கிறது. **வேதாகமப் பாணி ஜெபம் இல்லாம் சபை வேதாகமப் பாணி வாழ்க்கையை வாழ முடியாது.** 10நாள் ஜெபக்கூட்டத்தின் மூலம் ஆதிச் சபை பிறந்தது.

**பிறந்த சபை ஜீவனோடு இருக்கத் தொடர்ச்சியான ஜெபம் தேவை.** எதற்காகவெல்லாம் ஆதிச்சபை ஜெபித்தது: **அப்போஸ்தலர் 4:29-30, அப்போஸ்தலர் 8:15-16.** பேதுரு சிறை வைக்கப்பட்டிருந்த போது சபை என்ன செய்தது: **ஊக்கத்தோடு ஜெபித்தது – அப்போஸ்தலர் 12:5, 12 இது இரவிலே நடந்தது.** ஆகவே சபை இரவு ஜெபம் நடத்தி இருக்கிறது. **அந்தியோகியா சபையிலே ஜெபம் நடந்தது: அப்போஸ்தலர் 13:2.** நிருபங்களில் சபையானது ஜெபிக்க வேண்டும் என ஊக்குவிக்கப்படுவதைக் காணலாம் - எபேசியர் 6:18, கலாத்தியர் 4:2.

**புதிய ஏற்பாட்டு சபை ஜெபத்தின் மூலமே வல்லமையுள்ளதாக மாறியது – லூக்கா 11:1.**

### சபையில் ஜெபக்கூட்டம் நடத்த சில நடைமுறை குறிப்புக்கள்:

நாம் சபை அங்கத்தவர்களை எப்படி ஜெபிக்கும்படி தூண்டி வழிநடத்தலாம் என ஆராய்வோம்:

**தேவன் தன் ஜெபப் பாசறையில் வைத்து ஜெபிப்பதற்குத் தேவையான பாடங்களைக்கற்றுத்தருவார்.** எமக்கு ஒரு ஜெப எழுப்புதல் தேவை. **அப்போஸ்தலரது ஜெப வாழ்வின் புதுப்பித்தல் தேவை.** ஏன்? நம்முடைய சபைகள் உண்மையான வேதாகம சபையாக விளங்குவதற்காகும். **சி.எச். ஸ்பேர்ஜனுடைய ஒவ்வொரு எழுப்புதலுக்கும், கூட்டங்களுக்கும் முன் ஜெபமே காணப்பட்டது.** ஜெபம் இல்லை எம் பிரசங்கம் - கொல்லும் (அழிக்கும்). **பாடல் எந்தக் காக்கத்தையும்**

ஏற்படுத்ாது. எந்த சுவிசேஷ முயற்சிகளும் வெற்றி அளிக்காது. **ஒரு சபையிலே ஜெபக்கூட்டம் ஒரு முக்கியமான கூட்டம ஆகும்.**

## 01. ஜெபத்தை வழிநடத்துபவர் தன்னை ஆயத்தப்படுத்த வேண்டும்.

தேவனுடைய வழிநடத்துதலைத் தேடுங்கள். **தேவ திட்டத்தைக் கண்டு கொள்ள முற்படுங்கள்.** ஜெபத்தில் இருக்கும் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்தக்கூடாது. **அதாவது ஒரு கடை உணர்வை உண்டாக்கக்கூடாது.** அதே நேரத்தில் ஜெபத்தில் காணப்படும் தவறான காரியங்களை பார்த்துக் கொண்டும் இருக்கமுடியாது. **ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவரின் சுயாதீனத்திற்கே விட்டுக் கொடுக்க வேண்டுமே ஒழிய மாம்சத்தின் சுயாதீனத்திற்கல்ல.** சட்ட ரீதியான ஆவி ஜெபக்கூட்டத்தைக் கொன்று போடும். இது பிசாசுக்கு ஆதரவு கொடுப்பதாகிவிடும். **நீங்கள் ஒரு ஜெபக் கூட்டத்திற்கு போகுமுன் மக்களுக்கு ஆசீர்வாதமான ஒன்றை கர்த்தர் கரும்வரை காத்திருங்கள்.**

## 02. வேதாகமத்தின் ஒரு பகுதியை வாசிப்பது நல்லது.

## 03. ஜெபம் சுருக்கமானதாக இருந்தால் நல்லது.

மற்றவர்கள் பார்க்க வேண்டும் என ஜெபிப்பது. **இது பரிசேயர் செய்வது: இது கர்த்தருக்கு அருவருப்பு.** நீங்கள் மனிதருக்கு முன்பாக அல்ல தேவனுக்கு முன்பாகவே ஜெபிக்க வேண்டும்.

## 04. ஜெபத்திற்கு ஏற்றதாக பாடல் இருப்பது நல்லது.

**சபையின் ஜெபக் கூட்டங்களைக் குறித்து பெரிய சரித்திரமே உண்டு.** *R.A.Torrey* சொல்கிறார்: கிறிஸ்தவ சரித்திரத்தின் முதலாவது பெரிய எழுப்புதலின் ஆரம்பம் பத்து நாள் ஜெபக்கூட்டத்தின் விளைவே ஆகும். **அன்றில் இருந்து இன்றுவரை உண்மையான எழுப்புதல் எல்லாவற்றின் ஆரம்பம் ஜெபத்திலேயே உண்டு.** ஒரு ஜெபக்கூட்டத்தில் தான் *John Wesley*யின் இருதயம் அனல் கொண்டது. **இதுவே மெதடிஸ்த எழுப்புதலுக்குக் காரணம்.**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இனபருபன)

தொடரும்...

**சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்:**

வினாவிடை - 73

நா.கிறிஸ்தினா.
காரைநகர்.





குறுக்கெழுத்துப்போட்டி - 71

நா.அன்னாள்,
காரைநகர்.

# குறுக்கெழுத்துப்போட்டி — 72

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ⌖ | 02 | ⌖ | 03 | | | | 04 |
| | | | ⌖ | | ⌖ | ⌖ | ⌖ | |
| | | | | | ⌖ | 05 | | |
| | | | | | ⌖ | | 06 | ⌖ |
| ⌖ | | | | | ⌖ | 07 | | |
| | | ⌖ | 09 | ⌖ | | | | 08 |
| | 10 | | | | | | ⌖ | |
| | | | | | | | 11 | |
| 12 | | | | | ⌖ | ⌖ | ⌖ | 13 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -



## இடமிருந்து வலமாக

05. யூதாவின் இரட்டைப் பிள்ளைகளில் ஒருவன்
07. செலோப்பியாத்தின் குமாரத்திகளில் ஒருத்தி
10. போவாஸ் இந்த இடத்திலே பாக்கியவானாயிருப்பான் என்று கூறப்பட்டது
12. இது ஞானிகளின் கண்களை குருடாக்கி, நீதிமான்களின் கண்களை தறுமாறாக்கும்

## வலமிருந்து இடமாக

04. ஆபேல் பட்டணத்தின் இன்னொரு பெயர்
06. "இஸ்ரவேலை ஆளப்போகிறவர் பெத்லகேமிலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தவன்
08. சவுலின்சால்வைத்தொங்கலை அறுத்துக்கொண்டதின்நிமித்தம்இவன்மனது அடித்துக்கொண்டிருந்தது
11. யோசுவாவை இங்கே அடக்கம் பண்ணினார்கள்

## மேலிருந்து கீழாக

01. கிபியாவின் கடைசி முனை
02. மனுசனுடைய....... அவன் வழியைத் தாறுமாறாக்கும்: என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும்
03. ஈராம் தனக்கு சாலொமோன் கொடுத்த பட்டணங்களுக்கு இவ்வாறு பெயரிட்டான்
04. இதன் அர்த்தம் "உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது"

## கீழிருந்து மேலாக

09. அசரியாவின் அப்பா
10. யோவாஸ் அலங்கத்தை இந்த வாசல் தொடங்கி மூலை வாசல்மட்டும் இடித்துப்போட்டான்
12. பென்யமீன் கோத்திரத்திலிருந்து கானானைச் சுற்றிப் பார்க்கப் போனவன்
13. யோவாகாசின் அம்மா




## வேதப்பகுதி: நீதிமொழிகள் 1:7—23

"அம்மா என்னை எவ்வளவு செல்லமாய் வளர்த்தீர்கள்! ஆனால் இப்போது நான் சிறையில் கஷ்டப்படுகிறேனே" என்று அழுதான் மணிவண்ணன். மணிவண்ணன் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதால் சிறையில் கஷ்டப்படுகிறான். இதற்கு காரணம் என்ன தெரியுமா? மணிவண்ணன் சிறுவயதிலேயே பெற்றோருக்கு கீழ்ப்படியமாட்டான். "நான் எப்படியிருந்தால் உங்களுக்கு என்ன?" என்று கேட்பான். அவனைத் திருத்த முடியாமல் பெற்றோர் கஷ்டப்பட்டனர். அவன் ஆகாத நண்பர்களோடு சேர்ந்து கொலை வழக்கில் சிக்கினான். இன்று சிறையில் துன்பப் படுகிறான்.



சிறுவயதிலிருந்தே நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். பெற்றோர் சொல்வதை மீறக்கூடாது. இல்லையென்றால் மணிவண்ணனைப் போல நாமும் கெட்டுப்போய்விடுவோம். பின்னர் அழுதாலும் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

**சிந்தனைக்கு:— சிறுவயதுகளில் பெற்றோருக்கு கீழ்ப்படியாவிட்டால் பின்னர் பெரிய குற்றங்களில் சிக்கித் துன்பப்பட நேரிடும்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — மே 01






## சார்லஸ் மீட்
## 1792 - 1873

### இழப்புகள் மத்தியிலும்...

"தென் திருவிதாங்கூர் மிஷனின் தந்தை" என்று அழைக்கப்படும் சார்லஸ் மீட்டின் முதல் மிஷனெரிப்பயணம். இங்கிலாந்திலிருந்து கப்பல் இந்தியாவை நோக்கி வந்தது. வரும் வழியிலேயே தம் இளம் மனைவியை இழந்தார். அவர் விட்டுச் சென்ற மூன்று மாதக் குழந்தையும் சில தினங்களில் மரித்துப் போனது.

இறைப்பணியாம் மிஷனெரிப் பணிக்காகத் தங்கள் உடைமைகளையும், உயிரையும் இழந்தவர் அனேகர். சார்லஸ் மீட் இவ்விழப்புக்களை கிறிஸ்துவினிமித்தம் ஏற்றுக் கொண்டு ஊழியத்தில் செயல்படலானார்.

மயிலாடியில் ரிங்கல் தௌபே விட்டுச் சென்ற ஊழியத்தைப் பொறுப்பேற்று, அதன் தலைமையிடத்தை நாகர்கோவிலுக்கு மாற்றினார். ஆதரவற்ற பிள்ளைகள் தங்க கட்டிடமும், போர்டிங் பள்ளியும், ஆலயமும், அச்சுத் தொழிலும் இவரால் ஆரம்பிக்கப்பட்டன. இவரின் அரும்பணியால் இரண்டு ஆண்டுகளில் 3000 பேர் கிறிஸ்தவர்களானார்கள். 1819ஆம் ஆண்டில் ஒரு செமினாரியை ஆரம்பித்து சாதி, சமய, வேறுபாடின்றி பலருக்கும் ஆங்கிலக் கல்வியை கற்றுக் கொடுத்தார்.

அந் நாட்களில் கீழ்ச் சாதிப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்று மேல் சாதிக்காரர்களால் மிகவும் அடிமை போல் நடத்தப்பட்டனர். இதனை மீட் ஐயர் எதிர்த்தார். இதனால் தோள் சீலைக் கழகங்கள் 1822ஆம் ஆண்டும், 1829ஆம் ஆண்டும் ஏற்பட்டன.

நெய்யூர் கிறிஸ்தவ வீடுகள், ஆலயம், பள்ளிக்கூடங்கள் எரிக்கப்பட்டன. மிஷனெரிகளின் கடும் உழைப்பால் கீழ்சாதி பெண்களும் மேலாடை அணியலாம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

கிறிஸ்தவர்களுக்கு உதவிய மீட் ஐயரைக் கொலை செய்ய பலமுறை சதி நடந்தது. ஆயினும் அவைகளினின்று அவர் தப்புவிக்கப்பட்டார். 1818ஆம் ஆண்டு, குளச்சல் துறைமுகத்திற்கு வந்த இவர், 35வருட உழைப்பால் ஆயிரக்கணக்கானோரை இறை இராஜ்ஜியத்திற்கென்று வழிநடத்தினார்.

**அன்பரே! உமது இழப்புக்களின் மத்தியிலும் உற்சாகமாய் ஊழியத்தைத் தொடர்கின்றீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கிறிஸ்தவர்களோடு மரிப்பேன் அல்லது அவர்களோடு உயிரோடு இருப்பேன் — சார்லஸ் மீட்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 25**

## வினா விடை - 74

*01.* "தன் இளைய மனைவியை அதிகம் நேசித்தவன்" யார்?

*02.* "தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப் போவேன்" என்றது யார்?

*03.* "எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" எப்போது?

*04.* "வழிக்கு ஒரு தடியை மாத்திரம் எடுத்துக் கொண்டு போகலாம்" என்றது யார்?

*05.* "நீர் செய்கிற காரியம் நல்லதல்ல" என்றது யார்?

*06.* "அது சின்ன ஊர்" அதன் பெயரென்ன?

*07.* "தங்கள் ஆஸ்திகளை சந்தோசமாய் கொள்ளையிட கொடுத்தார்கள்" அவர்கள் யார்?

*08.* "தன்னால் இயன்றதைச் செய்தவள்" யார்?

*09.* "நீர் வந்தது நல்ல காரியம்" என்றது யார்?

*10.* "தங்கள் வலைகளை அலசிக்கொண்டிருந்தவர்கள்" யார்?




○ போதகர் ஜோண் ஜெயக்குமார்
(France)

**பி**ன்மாற்றம் குறித்து ஆராய்ந்து பார்ப்போம். இக் காரியத்தை மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து ஆராய்ந்து பார்க்கலாம். மல்கியா தீர்க்கதரிசன புத்கத்திலிருந்து ஆராய்ந்து பார்ப்பதற்கு தகுந்த காரணங்கள் உண்டு. தேவன் மனிதனோடு பேசாத நாளென்று ஒரு நாளுமே இல்லை. ஆதாம் பாவம் செய்த போது ஆதாம் தான்: நான் தேவனோடு பேசக்கூடாது என்று தேவனைவிட்டு ஒளிந்து கொண்டான். உண்மையில் தேவன் தான். நான் சொன்னபடி நீ செய்யவில்லை ஆகவே என்னோடு பேசவேண்டாம் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் தேவன் தான் "ஆதாமே எங்கே இருக்கிறாய்" என்று கேட்டார். ஆகவே ஆதியாகமம் தொடக்கம், மல்கியா வரை தேவன் எப்படி மனிதனோடு பேச விரும்புகின்றார் என்பதனை காணமுடியும்.

உதாரணமாக, உயிர்நண்பர்கள் பிரிந்துவிட்டால் ஒருவர் பேசத் துடிப்பார். அல்லது யாராவது ஒருவரை அனுப்பி தன்னுடன் பேசும்படி கேட்பார். அல்லது பெரியவர்கள் யாராவது வந்து பேசி அந்த நட்பை சேர்த்துவிடுவார்கள். கணவன் - மனைவியை எடுத்துக் கொண்டால் பெரியவர்கள், தேவ ஊழியர்கள் சேர்ந்து அவர்களுடைய வாக்குவாதங்கள், பிரச்சினைகளை நீக்கி மறுபடியும் அவர்களைப் பேசவைப்பார்கள். ஆனால் **"தேவனுக்கு பேசுவதற்கு யாருமே இல்லை. தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக அன்று யாருமே இல்லை".** (அந் நாட்களில் இயேசு கிறிஸ்து வெளிப்படவில்லை.) ஆகவே தேவன் தாமே வலிந்து மனிதனோடு பேச வேண்டியிருந்தது. தேவன் ஆதாமோடு, நோவாவோடு, ஆபிரகாமோடு, ஈசாக்கோடு எல்லாம் பேசினார். இஸ்ரவேலர் தேவனுக்கு விரோமாக மகா கொடிய பாவம் செய்த போது கூட தேவன் மறுபடியும், மறுபடியுமாக அவர்களோடு பேசினார். அவர் கோபம் கொண்டார், தண்டித்தார் உண்மை தான். ஆனாலும் தன்னுடைய மகா உருக்கத்தினால் மறுபடியும் அவர்களோடு பேசத் தொடங்கினார்.

**"தேவன் மனிதனோடு பேசுவதை விரும்புகின்றார். அவர் பேசாமல் ஒரு போதும் அமைதியாக இருந்ததில்லை."** ஆனால் மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்திற்குப் பின்பு 400 வருடங்கள் தேவன் மனுஷனோடு பேசவிரும்பவில்லை: அல்லது பேசவேயில்லை. இந்த மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்திற்கு பின்பதாக தேவன் ஒரு தீர்க்கதரிசியைக் கூட அனுப்பவில்லை. ஒரு இறைவாக்குக் கூட அவர்களுக்க கிடைக்கவில்லை. ஏன் அப்படி கிடைக்கவில்லை என்பதனைத் தான் தியானிக்கப் போகின்றோம். இனி வேதத்தைக் கேட்கக்கூடாதபடி, வாசிக்கக் கூடாதபடி கொடிய நாட்கள் வரும் என்று வேதத்தில் காண்கின்றோம். அது உண்மையான காரியம். இனிவரப் போகின்ற நாட்களில் அது நிறைவேறும்.

ஆகவே மல்கியா புத்தகத்தில் தேவன் மனிதர்களோடு இறுதியாக பேசி இதற்கு பின் பேசவேகூடாது என்று 400 வருடங்கள் அமைதியாக இருந்தார். **அதே போன்று மல்கியா புத்தகத்தில் ஜனங்கள் செய்த தவறையே நாமும் மறுபடியும் மறுபடியும் செய்வோமானால் இனிவரும் நாட்களில் தேவன் நம்மோடு பேசாத நாட்கள் வரும்.** நாங்கள் அந்திக் கிறிஸ்துவின் மாய் மாலத்திற்குள் மூழ்கிப் போகின்ற காலங்கள் வரும். மல்கியா புத்தகம் பழைய ஏற்பாட்டில் இறுதிப் புத்தகம். மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்திற்கும் - யோவான் ஸ்நானகன் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்ற காலமும் ஏறத்தாள 400 தொடக்கம் 450 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாகும். இந்த நாட்களில் தேவன் மனிதனோடு பேசவில்லை, எந்த தீர்க்கதரிசிகளும் வரவில்லை. ஜனங்கள் ஏனோ தானோவென்று வாழ்ந்தார்கள்.

அவர்கள் சீர்கெட்டவர்களாயிருந் தார்கள்.

இந்த நேரத்தில் அவர்கள் தேவனை நோக்கி ஆறு கேள்விகள் கேட்பதைப் பார்க்கலாம். யோபு புத்தகம் அதியாகமம் எழுதப் படுவதற்கு முன்பே எழுதப்பட்ட புத்தகம் என்று சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆனால் யோபு விடம் தேவன் கேள்விகள் கேட்ட போது, யோபு சொல்கின்றார்: **"அடியேன நான் ஒன்றும் பேச மாட்டேன், என் கைகளால் வாயை மூடுகின்றேன்"** என்று சொல்லி மௌமாக இருந்து விட்டார். அவர் தேவனோடு பேசத் துணியவில்லை. ஆபிரகாம் ஆண்டவரோடு பேசும் போது, **"ஆண்டவருக்கு கோபம் வரா திருப்பதாக நான் இன்னும் இந்த ஒருவிசை மாத்திரம் பேசு கின்றேன்"** என்ற வார்த்தையை பாவித்தே, சோதோம் - கொமோரா நகரத்திற்காக கெஞ்சுகின்றார். மோசையைப் பார்த்தால்: **"அவர் முகம்குப்புற விழுந்து கிடந்தே பேசுகின்றார்"**. தேவனோடு பேச, வாதாட அவர்களால்முடியவில்லை. ஆனால மல்கியா காலத்தில் துணி கரமான ஒரு ஜனம் வந்து தேவனி டத்தில் நேருக்கு நேர் கேள்வி கேட்கின்றவர்களாயிருந்தார்கள். இவர்கள் தேவனிடத்தில் ஆறு கேள்விகள் கேட்டார்கள். அவ் ஆறு கேள்விகளும்எவை என்பதனை பார்த்து, நாம் இந்த காலத்தில் எப்படி இருக்கின்றோம் என்று எமது வாழ்வையும் சீர்தூக்கிப் பார்ப்போம்.

## 01. நீர் எப்படி எங்களை நேசித்தீர்? என்று கேட்கிறார்கள்.

**மல்கியா 1:2-3 (2.) நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்: கர்த்தர் சொல்லுகிறார்: ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். 3. ஏசாவையோ நான் வெறுத்தேன்: அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத் திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன். "நீர் எப்படி எங்களை நேசித்தீர்"** என்று கேள்வி கேட்டு அவரை குற்றம் சாட்டிய நாட்கள் அது. அவர் களுடைய மனநிலை எப்படிப் பட்டதாக இருந்தது என்றால், நாங்கள் 70வருடங்களாக கஸ்டபபட் டோமே, எங்கள் அம்மா-அப்பா கஸ்டப்பட்டு, நோய்வாய்ப் பட்டு இருந்தார்கள். நாங்கள் அந்நிய ஜாதியிடம் அடிமை களாக இருந்தோமே அப்போது தேவன் வரவில்லை: இப்போது மட்டும் தேவன் வந்து என்ன செய்யப் போகின்றார் என்பதாக இருந்தது.

ஆனால் தேவன் அழகான ஒரு பதிலைக் கூறினார்: யாக்கோபு ஏசாவுக்கு சகோதரன் அல்லவா. அண்ணனை வெறுத்து தம்பியை தெரிந்து கொண்டேன் அல்லவா அது போன்று தான் உங்களையும் நான் தெரிந்து கொண்டேன் என்று சொல்கின்றார். இன்று நாங்கள்

தேவனோடு போராடுகின்ற ஜனங்களாக இருக்கின்றோம். சதாரணமாக, இருமல், தும்மல் போன்ற வியாதிகள் வந்துவிட்டால் கூட தேவன் எங்களை கைவிட்டு விட்டார், அவர் எங்களை எப்படி நேசிக்கின்றார் என்று கேட்போம். அங்கே அவர்களைப் பாருங்கள், அவர்கள் எவ்வளவு நன்றாக இருக்கின்றார்கள், தேவன் எங்களை நேசித்தால் எங்களுக்கு இப்படி நடந்திருக்குமா? என்றெல்லாம் கேட்கின்றோம். பிரச்சினை வரும் போது, சுனாமி வந்த போது, எங்களுடைய குடும்பம் கஸ்டப்படும் போது தேவன் எங்கே போய் விட்டார்? இப்போது எப்படி எங்களை நேசிப்பார் என்று கேள்வி கேட்கின்ற காலமாக இது இருக்கின்றது.

ஆனால் தேவன் சொல்கின்றார்: "நான் ஏசாவை வெறுத்து யாக்கோபை நேசித்தேன் அல்லவா" அதன் அர்த்தம் என்னவென்றால், எத்தனையோ ஜனங்கள், பணக்காரர்கள், அறிவாளிகள் இருக்கும் நாட்களில் எங்களை இரட்சித்து அவருடைய வார்த்தையை அறிகின்ற அறிவைக் கொடுத்திருக்கின்றாரே அது தான் அவருடைய நேசம் என்பதனை கர்த்தர் காண்பிக்கின்றார். தேவ ஜனங்களே உங்களுக்கு வருகின்ற சம்பளம், ஆஸ்தி, ஆசீர்வாதம், சுகம் இதெல்லாம் அவருடைய நேசம் அல்ல. இந்த பூமிக்கு வந்திருக்கின்றோம், திரும்ப செல்லத்தான் போகின்றோம். இதற்கிடையில் வருகின்ற ஆசீர்வாதங்கள் எல்லாம் தேவன் எங்களை நேசிக்கின்றார் என்பதன் அர்த்தம் அல்ல. நான் வேலைக்கு சென்று மூன்று மாதங்களில் பதவி உயர்வு வந்தவுடன் கர்த்தர் என்னை நேசிக்கின்றார் என்று சொன்னால் அது கர்த்தர் நேசிக்கின்றார் என்பதன் அர்த்தம் அல்ல. அது கர்த்தர் உங்களுக்கு கொடுத்திருக்கிற பெலன், கிருபை. ஆகவே கிருபையையும் - ஆசீர்வாதத்தையும் கர்த்தர் நேசிக்கின்றார் என்று பொருள்கொள்ளாதீர்கள். அப்படியென்றால், பில்கேட்சையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார், அப்படிப்பட்டவருக்கு கர்த்தருடைய இரட்சிப்பு இல்லை. உலகத்தில் கோடி கோடியாக உழைக்கின்ற அவருக்கு வேத வசனம் தெரியாது, கடவுளே தெரியாது. ஆனால் அவரைப் பார்க்கிலும் உங்களை தெரிந்து கொண்டாரே அது தான் கர்த்தருடைய நேசம் என்று சொல்கின்றார். எங்களுடைய பிரச்சினை நேரத்தில் தேவன் எங்களை எப்படி நேசித்தார் அல்லது கைவிட்டார் என்று நினைத்திருந்தால் தயவு செய்து மனந்திரும்புவோம். எங்களுடைய வாயினால் அறிக்கை செய்யும் போது கவனமாய் இருப்போம். அது எங்களுடைய ஆயுள் சக்கரத்தை கொழுத்திவிடுகிறது என்று யாக்கோபு சொல்கின்றார். அந்த மக்கள் செய்த பிழையை நாமும் செய்ய வேண்டாம். தேவன் இப்படிச் சொல்லியும் அவர்கள் மனந்திரும்பவில்லை. இன்றும் அதிகமான ஜனங்கள் அதே கேள்வியைக் கேட்கின்றார்கள். நாம் இதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

## 02. "உமது நாமத்தை எதனால் அசட்டை பண்ணினோம்?" என்று கேட்கிறார்கள்

**மல்கியா 1:6-8 (6.) குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே: நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டை பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்: அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் என்கிறீர்கள். 7. என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே: ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்: கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே. 8. நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே: அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.** நாங்கள் தேவனிடம் சென்று அவருக்காக ஏதோ ஒன்றைப் பலியிடுகின்றோம். ஆகையால் தேவன் எங்களை நேசிக்க வேண்டியது தானே என்கிற மனநிலைக்குள் வந்து விட்டார்கள். இன்றைக்கு நாங்களும் இப்படியான மன நிலைக்குள் வந்திருக்கின்றோம். **மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வாழ்கின்ற வாழ்க்கை.** அதாவது ஒருவரைப் பார்த்து அவரைப் பார்க்கிலும் நான் பரவாயில்லை தானே என்று வாழ்வது தான் இங்கு குறிக்கின்ற வசனம்.

அவர்கள் சிந்தித்தார்கள்: மற்றவர்கள் பலியிடுவதில்லை: நான் சொற்ப அளவாவது பலியிடுகின்றேன் என்று நசல் பிடித்ததையும், ஊனமானதையும் தேவனுக்குப் பலியிட்டார்கள். இது கர்த்தருக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் கிறிஸ்துவைப் பார்த்து ஓடுகிறது அல்ல: பக்கத்தில் இருக்கின்ற சகோதர சகோதரிகளைப் பார்த்துத் தான் ஓடுகின்றோம். அவர்கள் தங்களுடைய பரிசுத்த வாழ்க்கையை ஒருவரை ஒருவர் பார்த்து ஓடினார்களேயொழிய கர்த்தரின் நீதி எதுவென்று பார்க்காமல் ஓடினார்கள். நாங்கள் ஜெபிப்பதில்லை, வேதம் வாசிப்பதில்லை, தேவனுக்குப் பிரியமாய் நடப்பதில்லை. ஆனால் அருகிலிருப்பவரைப் பார்த்து அவரைவிட நான் பரவாயிலில்லைத் தானே என்று நசல் கொண்டதை கர்த்தருக்குப் பலியிடுகின்றோம். அந்த காலத்தில் ஒரு குடும்பத்தில் பத்து அல்லது பதினொரு பிள்ளைகள் இருப்பார்கள். அதில் அறிவில் குன்றியவர்கள், திறமையற்றவர்களைத் தான் கர்த்தருக்கு என்று அர்ப்பணிப்பார்கள். அறிவாளிகளை, திறமையுள்ளவர்களை அனுப்பமாட்டார்கள். இன்று நாங்கள் இதில் மாறிவிட்

டோம், ஆனால் எங்களுடைய இருதயம் இன்னும் மாறவில்லை.

இன்றும் மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து தான் வாழப் போகின்றோமா? ஒரு நாளும் எங்களுடைய முதன்மையான நேரத்தை, விருப்பத்தை தேவனுக்குக் கொடுப்பதில்லை. எங்களுடைய அழுக்கானவைகளையும், நசல் கொண்டவைகளையும் தான் கர்த்தருக்குக் கொடுக்கின்றோம். ஆகையால் தான் தேவன் கேட்கின்றார்: **"நான் பிதாவானால் என் கனம் எங்கே?"** இன்றைகு நாங்கள் தேவனுக்கு கொடுக்கின்ற கனம் எப்படியானதாக இருக்கின்றது. எங்களுடைய முதன்மையானவைகளை கர்த்தருக்கு கொடுக்கின்றோமா? அன்று வயல்களில் விளைந்த தானியங்களில் முதன்மையானவைகளை கர்த்தருக்கென்று கொடுத்தார்கள். ஆனால் இன்று எங்களுடைய இருதயங்களிலிருந்து வருகின்ற முதன்மையான கனிகளை கர்த்தர் விரும்புகின்றார். சில பெற்றோர் அந்தப் பையனை விட எனது மகன் பரவாயில்லை என்று சொல்வார்கள். பிள்ளைகளை அப்படியான நிலைக்குள் தான் வளர்க்கின்றோம். ஆனால் அவர்கள் கிறிஸ்துவைப் பார்க்கின்ற நிலமைக்குள் தங்கள் பிள்ளைகள் வளர்கின்றார்களா என்று பார்ப்பதில்லை. நீங்கள் சபைக்குள் கொண்டு வந்திருக்கின்ற குடும்பம் எப்படிப்பட்டதாக இருக்கின்றது? சபைக்குள் ஒரு வாழ்க்கை: வெளியே இன்னொரு வாழ்க்கையாக இருக்கின்றதா? ஏனென்றால் சபைக்குள் நொண்டி நொண்டி நடக்கிறது வெளியே நடக்கவேமாட்டாது. யாக்கோபு பலியிடும் போது தனியாக செல்லவில்லை: அங்கே குடும்பத்தோடு செல் கின்றார். இன்று பலியிட வந்திருக்கிற நாம் என்ன பலியைக் கொண்டு வந்திருக்கின்றோம்? பணத்தை மட்டு மல்ல உங்கள் குடும்பத்திலிருந்து எதை கொண்டு வந்திருக்கின்றீர்கள்? நல்ல புஷ்டியான காரியத்தை கொண்டு வந்திருக்கின்றோமா?

## 03. "ஏன்?" என்று கேட்டார்கள்.

**மல்கியா 2:10-16 (14[a]) ஏன் என்று கேட்கிறீர்கள்:** சாதாரணமாக குடும்பத்தில் சிறிய பிள்ளைகளிடம் ஏதாவது செய்யும் படி கூறினால், ஏன் செய்ய வேண்டும்? என்று கேட்பார்கள். இக் காரியம் எமக்கு பழக்கப்பட்டுவிட்டது. இங்கும் தேவனிடம் ஏனென்று கேட்கத்தொடங்கிவிட்டார்கள். உங்கள் சகோதரருக்கு அநியாயம் பண்ணிவிட்டீர்கள் என்று கூறிய போது அவர்களுக்கு தெரியும்: ஆனால் தங்களுடைய குற்றத்தை வெளிப்படுத்த விருப்பமில்லை. சாதாரணமாக ஏனென்று கேட்டுவிட்டார்கள். அன்று பாபிலோனில் வந்த ஜனங்களை எஸ்ரா, நெகேமியா போனறோர் சீர்படுத்த வேண்டியதாயிருந்தது. அவர்கள் அங்கிருந்த பாபிலோன் குமாரத்திகளை திருமணம் செய்ததால் அவர்களை ஆசாரிய பதவியிலிருந்து விலக்கவேண்டியிருந்தது. நெகேமியா கஸ்டப்பட்டு பெருமூச்சோடு அவர்களை

சீர்திருத்தினார். அப்படிப்பட்டவர்களை ஆசாரிய வகுப்பிலிருந்து விலக்கிவைத்தார்கள். இப்படியான பெரிய சீர்திருத்தத்தை எஸ்ரா, நெகேமியாக போன்றோர் செய்தார்கள். அவர்கள் அப்படி பரிசுத்தமாய் கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்தார்கள்.

ஆனால் சொற்ப வருடங்களுக்கு பிற்பாடு இரண்டாம் தரமும் இந்த பாவத்தை அவர்கள் செய்ய ஆரம்பித்தார்கள். **அந்நிய பெண்களை திருமணம் செய்ததால் இவர்களுக்குள் பெரிய பிரச்சினை வந்தது. சகோதரர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டது என்று வசனம் சொல்கிறது. அந்நிய பெண்களை திருமணம் செய்த யூத புருஷர் தங்களுடைய தாய்-தகப்பன், சகோதரருக்கு உதவி செய்வதை விட்டுவிட்டு மனைவியின் சகோதர சகோதரிகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுது பாபிலோனியர் பெருகவும், யூதர் மிகவும் கஸ்டப்படவும் தொடங்கினார்கள்.** இந்தப் பழக்கம் தமிழர்களிடமும் காணப்படுகிறது. மனைவி மீது அன்பு கூருகின்றோமோ இல்லையோ மனைவியின் குடும்பத்தின் மீது பாசம் அதிகமாக இருக்கும். யூதர்களும் இப்படியாக அந்நியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து யூதர்களை கைவிட்டுவிட்டார்கள். இப்படியாக அந்நியர் வளரும் போது கலப்பு அதிகமாக உள்ளே வந்தது. தேவனுடைய ஊழியம் கெட்டுப்போனது. தேவனுடைய மக்கள் தங்களுடைய பரிசுத்தத்தை இழந்துவிட்டார்கள்.

இதன் பிற்பாடு யூத புருஷர்கள் முன்பு திருமணம் செய்த யூத ஸ்திரீகளை வேண்டாம் என்று தள்ளிவிட்டார்கள். ஆங்கில வேதாகமத்தில், தள்ளிவிடுதல் "*Divorce*" என்று சொல்லப்படுகிறது. **தேவன் விவாகரத்து செய்வதை வெறுக்கின்றார்.** இப்பொழுது அவர்கள் அந்நியர்களுடன் சம்பந்தம் கலந்ததினால், நீ செய்வது பிழை என்று தேவன் சொன்ன போது அவர்கள் **"ஏன்?"** என்ற கேள்வியை கேட்கிறார்கள். இப்பொழுது நாம் சோசலிசத்தில் இருக்கின்றோம் தேவன் எல்லோரையும் நேசிக்கின்றார், இயேசு எல்லோருக்காகவும் தானே இரத்தம் சிந்தினார் என்று நாங்கள் அந்நியருக்குள் செல்கின்றோம். பன்றிகளுக்கு முன் முத்துக்களைப் போட வேண்டாம் என்று இயேசு சொன்னார். அது அவைகளை மிதித்துக் கொண்டு உங்களையும் பீறிப்போடும் என்றார். அவர்களோடு சமாதானமாக இருக்க வேண்டும் ஆனால் எங்களுடைய ஐக்கியம் எங்கே இருக்கின்றது என்பதனை காண்பிக்க வேண்டும். **நாங்கள் பயமில்லாமல் எங்களுடைய பெண் பிள்ளைகளை இரட்சிக்கப்படாதவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கின்றோம். இப்போது ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் இரட்சிக்கப்படாத இளைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தைச் சார்ந்த இரட்சிக்கப்பட்ட சில இளம் பெண்கள் திருமணம் செய்வதற்காக வருகின்றார்கள்.**

வேதனையாக ஒரு காரியத்தைக் கூறுகின்றேன்: ஒரு பெண் இருந்தாள்.

அவருடைய தகப்பனும் ஒரு ஊழியக்காரன். அவள் இரண்டு முறை திருமணம் செய்து இரண்டு தடவைகள் விவாகரத்து பெற்றவள். மூன்றாவது தடவையாக இன்னொருவரை திருமணம் செய்தார். அப்பொழுது அவர் சொன்னார்: இவளும் ஒரு பெண் தானே. இவளுக்கும் வாழ்க்கை கொடுக்க போகிறேன் என்று. இப்போது அந்த நபரையும் விவாகரத்து செய்துவிட்டார். எவ்வளவு மாய்மாலமான கிறிஸ்தவ வாழ்க்கை என்று பாருங்கள். மல்கியா காலத்துப் பிரச்சினை இப்போதும் வருகின்றது. **தேவன் எல்லோரிலும் அன்பாக இருக்கிறார் என்று கூறி அந்நியரோடு சம்பந்தம் கலப்பதை தேவன வெறுக்கின்றார்.** தேவனிடம் ஏன் என்று கேட்பதை தயவு செய்து விட்டுவிடுவோம். அவர் சொன்னால் கீழ்ப்படிவோம், அவர்கள் தேவனுக்கு துரோகம் பண்ணினார்கள். சபையைச் சீர்குலைத்தார்கள். அந்நிய ஜனங்களை உள்ளே கொண்டு வந்தார்கள். வளர்கின்ற ஜனங்கள் பிழையான முறையிலே வளர்க்கப்பட்டார்கள். ஆகையால் தேவ ஜனம் சீர்கெட்டுப்போனது. அவர்கள் "ஏன்?" என்று கேட்ட கேள்வி தேவனுக்கு விசனமாய் இருந்தது.

## 04. "எதினாலே?" என்று கேட்டார்கள்.

**மல்கியா 2:17 உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள்: ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள்: பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள்பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே.** முதல் ஏன் என்று கேட்டவர்கள் இப்போது எதினாலே என்ற கேள்வியினூடாக எப்படிப்பட்ட பின்மாற்றத்திற்குள் சென்றார்கள் என்பதனைக் காணலாம். **"எதினால் உம்மை வருத்தப் படுத்தினோம்?"** என்று ஆதாரம் கேட்கின்ற ஜனங்களாக மாறினார்கள். இன்றைக்கு எங்களுடைய விசுவாசம் கூட ஆண்டவரே இந்த வியாதியை சுகப்படுத்தினால் அப்பொழுது நான் அறிவேன் நீர் உண்மையான தேவன் என்று ஜெபிக்கின்றோம். இது நல்ல வார்த்தையாக இருந்தாலும் இது பொல்லாத ஜெபமாகவே இருக்கின்றது. இன்னும் சிலர் ஜெபிப்பார்கள்: நீர் இந்த வியாதியை குணமாக்க வல்லவர் என்று நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுது குணமாக்கும் மற்றவர்கள் உம்மை நம்புவார்கள் என்பதாக. இவைகள் எல்லாம் **"எதினால்?"** என்றே கேட்கின்றோம். ஒன்றைக் காரணம் காட்டி தேவனை விசுவாசிப்பது எங்களுக்கு வேண்டாம்.

உங்கள் வார்த்தையால் கர்ததரை வருத்தப்படுத்தியிருக்கின்றீர்களா? தேவன், ஏன் இந்த மனிதனைப் படைத்தேன் என்று ஆரம்பத்தில் வருத்தப்பட்டார். பின்பு ஏன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தேன் என்று மோசையைப் பார்த்து வருத்தப்பட்டார். அதே வருத்தம் மல்கியாவின் காலத்

திலும் தேவனுக்கு ஏற்பட்டது. இந்த காலத்தில் கெட்டவனை நல்லவனாக பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அது தேவனுக்கு விசனமாக இருந்தது. அப்படிப் பட்டவர்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று தேவன் சொல்வதைப் போன்று சொல்கின்றார்கள். **கெட்டவனை நல்லவனாகப் பார்ப்பதே பாவம். அதிலும் தேவன் அவன் மேல் பிரியமாய் இருக்கிறார் என்று சொல்வது எவ்வளவு பெரிய பாவம்.** நாங்கள் பழகுகின்ற நண்பர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும். அவன் குடிகாரன், கோபக்காரன் தான் ஆனால் அவனுக்கு நல்ல மனசு, தேவன் அவனையும் இரட்சிப்பார் என்று சொல்லி இறுதியில் அவர்களோடு நாமும் சென்றுவிடுகின்றோம். அங்கே எங்களுடைய கிறிஸ்தவ சாட்சி கெட்டுப் போகின்றது.

மல்கியா காலத்தில் கெட்டவனை நல்லவன் என்று சொல்லி தங்களுடைய குடும்பத்தில் அணைத்துக் கொண்டார்கள். தேவன் அதை வெறுக்கிறார். நாங்கள் பொய் கூறிவிட்டு போதகரைப் பார்த்து போதகரே இதற்காகத் தான் நான் பொய் சொன்னேன். அவ்வாறு நான் கூறாவிட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? என்று சொல்கின்றோம். நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு பிழைகளுக்கும் சாட்டுப்போக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றோமா?

## 05. "எந்த விஷயத்தில் நாம் திரும்ப வேண்டும்?" என்று கேட்டார்கள்.

**மல்கியா 3:7-10 (7.) நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப் போனீர்கள்: என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். 8. மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. 9. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்: ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். 10. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்: அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.** மோசேயின் காலம் முதல் கட்டளைகளைக் கொடுத்தார். அவர்கள் அவைகளைவிட்டு விலகி சிறைப்பட்டு மறு படியும் திரும்பி வந்தார்கள். அப்பொழுது என்னிடத்தில் திரும்புங்கள், அப்பொழுது நான் உங்களிடத்தில் திரும்புவேன்

என்று தேவன் சொன்ன போது, **"எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும்?"** என்று கேட்கின்றார்கள்.

நாம் பிழை செய்யவில்லை, ஒழுங்காகத்தானே இருக்கின்றோம், ஏன் எங்களை குற்றப்படுத்துகின்றீர் என்று தேவனிடத்தில் கேட்கிறார்கள். ஒன்றைச சொன்னால், அதை ஏற்றுக் கொள்கின்ற மனநிலை இந்த காலத்தில் சபைகளில் குறைந்துவிட்டது. எந்த விஷயத்தில் என்று எதிர்த்து கேள்வி கேட்கின்ற ஜனங்கள் மல்கியா காலத்தில் இருந்தார்கள். இதன் பின்னணி என்னவென்றால், எஸ்ரா, நெகேமியா காலத்தில் ஆலயத்தையும் அலங்கத்தையும் கட்டினார்கள். பிரதான ஆசாரியர், லேவியர், பாடகர்குழு, இரவும் பகலும் அலங்கத்தைப் பாதுகாக்கும ஜனங்களை எல்லாம் ஏற்படுத்தி விட்டார்கள். இப்பொழுது தேவையான பணம் எல்லாம் தேவாலயத்தில் ஜனங்கள் கொடுப்பதிலிருந்து தான் பெறப்படுகின்றது. தசமபாகத்தினால் ஆலயம் நிரம்புகின்றது. ஊழியர்களின் தேவை சந்திக்கப்படுகின்றது. இப்படியே உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருப்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. ஒரு சிறு ஜனம் கொடுக்கும் சிறு காரியத்தால் பெரிய எழுப்புதல் வர வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

இப்படியாக நெகேமியாவின் காலத்தில் நடந்தது. ஆனால் இப்போது ஜனங்கள் அந்நியர்களை திருமணம் செய்ததால். இப்போது அவர்களுக்கு வேறு உறவுகள் வந்து விட்டதால் (பெலிஸ்தர். பாபிலோனியர்) சபைக்கு கொடுத்து தேவனுடைய கீர்த்தியை பரப்புவதை பார்க்கிலும் தங்களுடைய குடும்பத்தை வளர்க்கலாம் என்ற யோசனைக்குள் வந்து விட்டார்கள். ஆலயத்தை மறந்து விட்டார்கள். அங்கிருந்த பாடகர் குழு எந்த வருமானமும் இல்லாமையால் சொந்த வேலை செய்யும் படியாக வெளியே சென்றுவிட்டார்கள். எருசலேம் கோபுரத்தைக் காப்பவர்களுக்கு ஊதியம் கிடைக்காமையால் அவர்களுடைய எண்ணிக்கையும் சிறிது சிறிதாக குறைந்துவிட்டது. குறிப்பிட்ட ஆசாரியர்களும் தங்களுடைய வேலையை பார்க்க சென்றுவிட்டார்கள். ஆலயத்தில் வேலை செய்கிற வேலைக்காரர்களும் குறைந்துவிட்டார்கள். அப்பொழுது தேவன் சொல்கின்றார்: **"நீங்கள் என்னை வஞ்சிக்கலாமா?".** சிறு துளி பெருவெள்ளம் என்று ஒரு தமிழ் பழமொழி இருக்கின்றது. தேவன் இந்த சிறு ஜனத்தை வைத்து இஸ்ரவேல் மேல் பொறாமை கொண்ட, அவர்களை தோற்கடிக்க, வெறுப்பாய் இருந்த ஜனங்களுக்கு கர்த்தர் தான் உண்மையான தெய்வம் என்று காண்பிக்க விரும்பினார்.

அதை ஜனங்களிடம் எதிர்பார்த்தார். இன்று ஜனங்கள் எதற்கெல்லாம் பங்காளராயிருக்கிறார்கள்? ஏன் உங்களுக்கு தேவையில்லாத வேலை. சபைக்கு பங்காளராயிருந்து இந்த பகுதியை ஆதாயப்படுத்துங்கள். நான் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். அதில் தோன்றியவர் கூறினார்: நான் பரலோகத்

திற்கு சென்றேன். அங்கே இயேசு கிறிஸ்துவைப் பார்த்தேன். சொற்ப நேரத்தில் அவர் மறைந்துவிட்டார். பின்பு நான் அந்த வீதியில் நடந்து சென்ற போது இயேசு கிறிஸ்து சிறுபிள்ளைகளுடன் தண்ணீர் அடித்து விளையாடுகின்றாராம். இதற்கெல்லாம் பங்காளர் தேவை என்று கேட்கின்றார். அதற்கு அநேகர் தங்களுடைய பங்கைக் கொடுப்பதால் சொந்த சபை அழிகின்றது. உங்களுடைய பணம் எங்கே? உங்கள் பங்கு எங்கே இருக்கின்றது? களியாட்டங்களிலா? நண்பர்களுடனா? விளையாட்டிலா? அல்லது நகைக்கடையிலா? உங்கள் பங்கு எங்கே இருக்கின்றது. உங்களுடைய தேவ சபையில் பங்குவகிக்கின்றதா? அந்த நாட்களில் ஜனங்கள் தேவனை வஞ்சித்துவிட்டார்கள். ஊழியம் மங்கிவிட்டது, தேவன் செய்ய நினைத்த காரியங்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டது. அந்த தவறை நாம் செய்யவேண்டாம். எங்களுடைய பங்கை எமது சபைக்கு கொடுப்போம். பக்கத்திலிருக்கிற ஜனங்கள் இரட்சிக்கப்பட பிரயாசப்படுவோம். சபைக்குள் எழுப்புதலை வாஞ்சிப்போம்.

## 06. "உமக்கு விரோதமாய் என்னத்தை பேசினோம்?" என்று கேட்டார்கள்.

**மல்கியா 3:13-15 13. நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்: ஆனாலும் உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள். 14. தேவனைச் சேவிப்பது விருதா. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்னபிரயோஜனம்? 15. இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்: தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்: அவர்கள் தேவனைப் பரிட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்.** தேவனை சேவித்தது விருதா என்று சொன்னார்கள். **"அவருடைய கட்டளைகளை கைக்கொள்வதினால் என்ன பிரயோசனம்?"** என்று சொன்னார்கள். இங்கே உபதேச கோளாறுகள் வந்து விட்டது. ஆசீர்வாதத்தின் உபதேசம் வந்து விட்டது. தேவன் உங்களை ஆசீர்வதித்துவிட்டார்: நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கின்றார்கள். அந்த நாட்களில் ஜனங்கள் வழிதவறியதால், தேவாலயம் இப்படியிருக்கின்றதே என்று சிலர் துக்கித்தார்கள். ஆனால் அங்கே அப்படியான உபதேசம் வந்துவிட்டது. தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளாமல், அவரை சேவிக்காமல் இருப்பவர்களை பாக்கியவான்கள் என்று சொல்கிறோம். அவர்கள் எப்படியிருக்கிறார்கள் பாருங்கள் என்று சொல்லி பிழையான முன் உதாரணங்களை எங்கள முன் வைத்துவிட்டோம். மல்கியா காலத்திலும் ஜனங்கள் பிழையான முன் உதாரணங்களை வைத்து சீர் கெட்டுப்போனார்கள்.

இவர்கள் கேட்ட ஆறு கேள்வி களின் பின் தேவன் 400 வருடங்கள் அமைதியாக இருந்து விட்டார். தேவ ஜனமே நாங்

களும் ஏன்? எதினால்? எப்பொழுது கூறினோம்? எப்போது கோபப் படுத்தினோம்? என்ற கேள்வி களினால் தேவன் எம்முடன் பேசாத படி செய்து விடுவோம். அவர்களு டைய சிறிய கேள்விகளால் தேவன் 400 வருடங்கள் பேசாமல் அமைதியாக இருந்துவிட்டார். இப்பொழுது நீங்கள் கேட்கலாம், மல்கியா பழைய ஏற்பாட்டின் காலம். இப்பொழுது நாம் கிருபை யின் காலத்தில் இருக்கின்றோம், பரிசுத்த ஆவியானவர் எமக்குள் இருக்கிறார். இப்போது அப்படி நடக்குமா? என்று. ஆம் நடை பெறும்!. அந்த ஆறு கேள்விகளும வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படுகின்றது. எபேசு சபைக்கு கர்த்தர் சொல்கிறார்: நீங்கள் ஆதி அன்பை விட்டுவிட்டீர்கள். அதாவது நீர் எப்படி எங்களை சிநேகித்தீர் என்று கேட்கிறார்கள். பெர்கமு சபை தேவனுக் குரிய கனத்தை கொடுக்கவில்லை. துன்மார்க்கரை நீதிமான்களாயும்: நீதிமான்களை துன்மார்க்கராயும் பார்த்தார்கள். எதுசரி: எது பிழை என்று சரியாக பார்க்கத் தவறிவிட்டார்கள். தியத்தீரா சபையை மல்கியாவின் காலத்தில் கேட்ட மூன்றாவது கேள் விக்கு ஒப்பிடலாம். கணவன்-மனைவி உறவிலும். சகோதரர்களிடையேயும் குழப்பம் ஏற்பட்டது. விபச்சாரத்தின் காரியங்களும் சபையிலே இருந்தது. பிழையான போதகங்களும் அந்த சபையில் இருந்தது. சர்தை சபையை நான்காவது கேள்விக்கு ஒப்பிடலாம். நாங்கள் சாட்டு சொல்லி தீமையை நன்மையாக்குதல். எல்லாவற்றையும் நல்லதாக பார்த்தால் நன்றாகத் தான் தெரியும் என்று சொல்லி சமாளித்துப் போகின்ற காலமாக இருக்கின்றது. லவோதிக்கேயா சபையை 05. 06ஆவது கேள்விக்கு எடுக்க முடியும். அனலும் இன்றி குளிரும் இன்றி செத்துப்போனதைப் போன்ற சபை யாக காணப்பட்டது.

ஆகவே, சபையே நாம் கடைசி கால நிகழ்வில் இருக்கின் றோம். ஒரு காலத்தில் சீர் கெட்டுப்போனவர்களை நல்ல வர்களாக நிறுத்தினோம். ஆனால இன்று சபை சீர்கெட்டுப்போய்க் கொண்டிருக்கிற காலமாக மாறி விட்டது. தேவ தரிசனத்தை இழந்துவிட்டோம். இந்த வார்த் தையின் ஊடாக தேவன் சொல் கின்ற காரியம் என்ன வென்றால், எங்களுடைய தனிப்பட்ட வாழ் வில் தேவன் பேசாத நாட்கள் வரப்போகின்றது. எனவே உங்கள தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கையை ஆராய்ந்து பாருங் கள். உங்கள் பிள்ளைகள் யாரோடு பழகுகின்றார்கள்? யாருடன் ஐக்கியம் வைத்திருக்கின்றார்கள்? என்று ஆராய்ந்து பாருங்கள். முதலாவது உங்களுடைய குடும்பத்தை சீர்படுத்துங் கள். உங்களுக்கு அருகில் இருக்கின்ற சகோதர சகோதரிகளை நியாயம் தீர்க்க வேண்டாம்: உங்களையே நியாயம் தீருங்கள். எங்களுக்குள் ஒரு சுத்திகரிப்பை முதலாவது கொண்டு வருவோம். இயேசு கிறிஸ்து சொன்னார்: ஜெயம் கொள்கிறவர்களுக்கு ஜீவகிரீ டத்தை தருவேன் என்று. இந்த ஓட்டத்தை சந்தோஷத் தோடே ஆரம்பித்தோம் ஆனால் துக்க மாக முடிக்கப்போகின்ற காலம்

வரப்போகின்றது. எத்தனை பேருக்கு ஜீவகிரீடம் கிடைக்கப் போகின்றதோ தெரியவில்லை. ஆகவே நாம் எங்களை சுத்திகரிக்காமல் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டோம்.

நாங்கள் அவதானத்தோடு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வோம். ஆடம்பரத்திற்குள் செல்ல வேண்டாம். சுயநீதியை விட்டுவிடுவோம். கிறிஸ்து இயேசுவை நோக்கி ஓட்டத்தை ஓடுவோம். கிறிஸ்துவுக்காக வாழப்பழகுவோம். எங்களுடைய குடும்பத்தை கிறிஸ்துவுக்காக கொண்டு வருவோம். தாழ்மையோடு எங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டு, திருத்துவதற்கு விட்டுக் கொடுப்போம். பிழையான உபதேசத்தை வீட்டில் கூட பேசவேண்டாம். பிழையான உபதேசத்தை வீட்டிற்குள் கொண்டு வருகின்ற தொலைக்காட்சி, வானொலிகளை விட்டு விடுவோம். ஏனென்றால் நாம் கவனமாய் இருந்தாலும் அது எமது பிள்ளைகளைப் பாதித்து விடும். CDக்களில் வருகின்ற பாடல்களில் இயேசு என்ற சொல் வருவதினால் அது கிறிஸ்துவைக் குறித்த பாடல் அல்ல. ஆகையால் பாடல் CDக்களை வாங்கும் போது கூட கவனமாய் இருங்கள். ஆகவே தயவு செய்து மல்கியா காலத்தில் ஜனங்கள் செய்த தவறை நாமும் செய்யாது; கேள்வி கேட்டுக் கேட்டு தேவனை விட்டு பின் மாற்றமடைந்த மக்களைப் போல நாம் பின்மாற்றமடையாது தேவனுடைய சத்தத்துக்கு அடங்கி வாழ்வோம். இயேசு கிறிஸ்துவின் கீர்த்தியை உலகிற்குள் பரப்புவோம்! இயேசுவுக்காக ஓடுவோம்!!

## வினாவிடை – 73

### சரியான பதில்கள்

01. எல்க்கானா – 1சாமுவேல் 1:8
02. குணசாலியான ஸ்திரீ – நீதிமொழி 31:27
03. இஸ்ரவேலர் – சங்கீதம் 78:23–25
04. ஏசா – ஆதியாகமம் 25:34
05. ஒபதியா – 1இராஜாக்கள் 18:7
06. நோவா – ஆதியாகமம் 9:20
07. இயேசுகிறிஸ்து – லூக்கா 24:41–43
08. இஸ்ரவேல் வம்சம் – ஏசாயா 5:1–7
09. சப்பீராள் – அப்போஸ்தலர் 5:10
10. எப்பிராயீம் – ஓசியா 7:8



# சரியான விடை எழுதியவர்கள்
## குறுக்கெழுத்துப் போட்டி - 72, வினா விடை - 73

**கனடா**
01. குகன் குடும்பம்

**யாழ்ப்பாணம்**
02. பெ.ஜெசிதரன்

**நாவற்குழி**
03. சூ.ஜான்சி


**நவக்கிரி**
04. அ.தயாழினி
05. க.கிருஸ்ணரூபா
06. செ.ரூத்

**மீசாலை**
07. இ.சுரேகா
08. ஜ.சத்தியதேவன்
09. ச.பேர்னாட்
10. ச.கெற்சியா
11. ச.இராஜபாமா

**புங்குடுதீவு**
12. ப.ஜக்சனா
13. ப.யோசியா

**காரைநகர்**
14. கோ.இன்பவதனி
15. கோ.மங்களேஸ்வரி
16. செ.மேகலா
17. பா.தர்சினி
18. பா.கோமதி
19. பா.மோகனதாஸ்
20. ம.டயானி
21. லோ.வதனி
22. நா.கிறிஸ்ரீன்
23. நா.கிறிஸ்தீனா
24. தே.காந்தரூபன்
25. நா.அன்னாள்
26. வி.அனுராதா
27. பா.அனுசியா
28. பா.அனுகரன்
29. இ.லக்சான்

**பாண்டவெட்டை**
30. எஸ்.ஜெரோம்
31. சி.றஜிந்தினி
32. எஸ்.கயா
33. எஸ்.ரகுலா
34. செ.நகுலா
35. வ.கெத்சியாள்
36. த.மதியழகன்
37. ம.சிவகௌரி
38. ம.தேவகிறேசியன்
39. ம.நிம்சிகா
40. சி.ரதீஸ்வரி
41. சி.றகுகரன்
42. வி.தயாழினி
43. வ.ஜோகனன்
44. வ.குவாழினி
45. வ.ஜெயாழினி
46. ஜே.நிசாந்தினி
47. எம்.நிதர்சினி
48. எம்.மதுசா
49. ரி.திருவதனி
50. எஸ்.உசா
51. கே.சூரியகுமார்
52. எஸ்.கிதியோன்
53. எம்.யோகேஸ்வரன்



குறிப்பு:- அன்பின் வாசகர்களே! குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடை போட்டிகளில் பங்குபெறுபவர்கள் இனிவரும் நாட்களில் இரண்டின் விடைகளையும் தனித்தனித் தாள்களில் எழுதி அனுப்புவதுடன், உங்கள் பெயர், முகவரி என்பவற்றையும் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

பறித்து பிழிந்தவனுக்கு வாழ்வைக் கூறியவனும்: உடுக்களில் ஒன்றுக்கு ஒப்பிடப்பட்டவனும்: சர்ப்பத்திற்கு ஒப்பிடப்பட்டவனின் சகோதரனும் ஆகிய இவனின் தகப்பனின் தகப்பனாரின் மாமனார் எத்தேசத்தைச் சேர்ந்தவர்?

இதன் விடையையும் எழுதி அனுப்புங்கள்

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற
விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும்
விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட) Subscription

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | S.L Rs 220.00 Per Year |
| இந்தியா (India) | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர்:-..........................................................................

விலாசம்:-..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To: ....................................

....................................

....................................

....................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

சீயோன் தேவாலயப் பிரசுரம் *Zion Church Publication*